

பாடம் 11

மார்ச் 7-13

# யுத்தத்திலிருந்து வெற்றிக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *எபே 6:12; தானியேல் 10; எஸ்றா 4:1-5; யோசுவா 5:13-15; வெளி 1:12-18; கொலோ 2:15; ரோமர் 8:37-39.*

**மனன வசனம்:** பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள், திடங்கொள். தானியேல் 10:19.

தானியேல் 10-12 இல், இந்தப் புத்தகத்தின் இறுதிப் பகுதியை பார்க்கிறோம். இந்தத் தரிசனம் ஒரு நீடிய யுத்தத்தைப் பற்றியது. தானியேல் 10:1. இந்த யுத்தத்தின் சில விவரங்களை தானியேல் 11 சொல்கிறது. தானியேல் 10இல் அதன் ஆன்மிகப் பரிமாணங்களைப் பார்க்கிறோம். பூமியில் நடக்கும் யுத்தங்களுக்குப் பின்னால், பிரபஞ்சத்தின் ஆன்மிகப் போராட்டம் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. நாம் ஜெபிக்கும்போது, இந்தப் பிரபஞ்ச போராட்டத்தில் நாம் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்துகிறோம் என்பதை இந்த அதிகாரம் காட்டுகிறது. ஆனால் நம் போராட்டங்களில் நாம் தனியராக இல்லை; இயேசு நமக்காக சாத்தானுடன் சண்டையிடுகிறார். நம்முடைய இறுதிச் சண்டையானது பூமிக்குரிய மனித சக்திகளுக்கு எதிரானது அல்ல; அந்தகாரச் சக்திகளுக்கு எதிரானது.

தானியேலுக்கு பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த பவுல் கூறுகிறான் : 'மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.' எபே. 6:12. சாத்தானை சிலுவையில் தோற்கடித்த இயேசு கிறிஸ்துவால்தான் நமக்கும் வெற்றி கிடைக்கிறது.

*2020, மார்ச் 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# உபவாசமும் ஜெபமும்

**கேள்வி: மீண்டும் தானியேல் என்ன செய்கிறான்? தானியேல் 10:1-3.**

தனது நீடித்த துக்கத்திற்கான காரணங்களை தானியேல் சொல்லவில்லை. ஆனால், பாபிலோனிலிருந்து பாலஸ்தீனத்திற்கு திரும்பிய யூதர்களின் நிலைமையை யோசித்து எவ்வாறு ஜெபித்திருக்கலாம்.

**கேள்வி: யூதர்கள் எருசலேமுக்கு திரும்பி வந்தது என்ன சவால்களை எதிர்கொண்டார்கள்? எஸ்றா 4:1-5.**

யூதர்கள் ஆலயத்தை திரும்பக்கட்ட முயற்சித்தபோது கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டார்கள் என்று எஸ்றா 4:1-5 சொல்கிறது. பெர்சிய அரசவைக்கு சமாரியர்கள் தவறான அறிக்கைகளை அனுப்புகிறார்கள், ஆலயக் கட்டுமானத்தை நிறுத்துமாறு அரசனிடம் வேண்டினார்கள். இத்தகைய நெருக்கடிகளை மாற்றுமாறு, மூன்று வாரங்களாக தானியேல் தேவனை வேண்டிக்கொள்கிறார்.

இந்தக் காலக் கட்டத்தில், தானியேலுக்கு 90 வயது இருக்கலாம். அவன் தன்னைப்பற்றி அல்ல, தனது மக்களைப் பற்றியும் அவர்கள் எதிர்கொள்ளும்சவால்களைப்பற்றியும்சிந்தித்தான். தேவனிடமிருந்து பதிலைப் பெறுவதற்கு அவர் மூன்று வாரங்கள் ஜெபத்தில் இருந்தான். இந்த நேரத்தில், தீர்க்கதரிசி மிகவும் எளிமையான உணவைச் சாப்பிடுகிறான். தமக்கு விருப்பமான உணவைத் தவிர்த்துவிட்டான்; பரிமளதைலம் பூசிக்கொள்ளவும் இல்லை. அவன் தனது வசதிகளையும் தோற்றத்தையும்பற்றி கவலைப்படவில்லை; ஆனால் ஆயிரம் மைல் தொலைவில் இருந்த எருசலேம் யூதர்களின் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தான்.

தானியேலின் ஜெப வாழ்க்கையைப் பார்க்கும்போது, சில முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். முதலாவதாக, நம்முடைய வேண்டுதலுக்கு உடனடியாக பதில்கிடைக்காதபோதும், நாம் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். இரண்டாவதாக, மற்றவர்களுக்காக ஜெபிக்க நாம் நேரம் ஒதுக்கவேண்டும். அப்படிப்பட்ட ஜெபங்களில் ஆசீர்வாதம் உள்ளது. 'யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்.' யோபு 42:10. மூன்றாவதாக, உறுதியான ஒன்றைச் செய்யுமாறு தேவனை ஜெபம் தூண்டுகிறது. எனவே, எல்லாக் காலங்களிலும் ஜெபியுங்கள். தாங்கமுடியாத சோதனைகள், பெரிய பிரச்சனைகள், பெரும் சவால்கள் வந்தாலும், நமது சுமைகளை தேவனிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்வோம். எபே 6:18.

---

தேவனைப்பற்றி நல்ல உணர்ச்சி ஏற்படுத்துகிற அகநிலை அனுபவமாக இல்லாமல், ஏதாவது செய்யுமாறு தேவனைத் தூண்டும் ஒரு புறநிலை அனுபவமாக ஜெபம் இருக்கிறது என்பது பற்றி இது என்ன சொல்கிறது? **தானியேல் 10:12.**

_______________________________________________

# அதிபதியின் தரிசனம்

**கேள்வி: தானியேலுக்கு என்ன நடந்தது? தானியேல் 10:4-9.**

தானியேல் விவரிக்கிற காட்சியை நாம் கற்பனைசெய்து பார்க்க முடியாது. தானி 10:5,6 சொல்கிற மனித தோற்றமானது பரலோக விசாரணைத் தரிசனத்தின் 'மனுஷகுமாரனுக்கு' ஒப்பாக இருக்கிறது. தானி 7:13. அவருடைய சணல் நூல் வஸ்திரமானது ஆசாரிய ஆடைகளை நினைவூட்டுகிறது. லேவி 16:4. தானி 8இன் பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் வருகிற 'சேனையின் அதிபதி' இவரே. ஆசாரியனுடைய உடையில் பொன்னும் இருந்தது. இவரை விவரிக்க மின்னல், நெருப்பு, வெண் கலம், சக்திவாய்ந்த குரல் போன்றவற்றைச் சொல்வதால், இவர் தேவ தன்மை உடையவர் என்பது தெரிகிறது. இவர் ஆசாரியனும் அரசனுமாக இருக்கிறார். எரிகோ யுத்தத்துக்குச் சற்று முன்பு யோசுவாவைச் சந்தித்த பரலோகவாசிக்கும் இவருக்கும் ஒற்றுமைகள் உண்டு. யோசுவா 5:13, 14. 'கர்த்தருடைய சேனையின் அதிபதியை' யோசுவா பார்த்தார். இங்கே 'அதிபதி' என்பதற்கான எபிரேய வார்த்தை **'சர்'**. தானியேல் 10:21 இல் மிகாவேலைக் குறிக்கிற 'அதிபதி' என்பதற்கான எபிரேய வார்த்தையும் இதே 'சர்' எனும் வார்த்தைதான். ஓய்வுநாளில் யோவான் தரிசித்த உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கும் தானியேல் பார்த்த புருஷனுக்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உண்டு.

**கேள்வி: தானியேல் 10இல் தானியேல் பார்த்த தேவகுமாரனுக்கும், யோசுவா 5:13-15 இலும் வெளி 1:12-18இலும் உள்ளவர்களுக்கும் என்ன ஒற்றுமைகள் உள்ளன?**

தானியேலுடன் இருப்பவர்கள் பயந்துபோகிறார்கள். தானியேல் பலவீனமாக தரையில் விழுகிறான். தேவனுடைய பிரசன்னத்தின் வெளிப்பாடு அவனைப் பிரமிக்க வைக்கிறது. அவனுடைய உடனடிப் பயம் எதுவாக இருந்தாலும், தேவன் வரலாற்றைக் கட்டுப்படுத்துகிறார் என்பதை தானியேலின் தரிசனம் காட்டுகிறது.

தானியேலின் காலத்திலிருந்து தேவன் தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பதுவரை உள்ள மனித வரலாற்றின் சுருக்கத்தை தேவன் தானியேலுக்கு அதிகாரங்கள் 11இலும் 12இலும் அளித்தார். நாம் மீண்டும் மீண்டும் பார்த்தபடி, மனித வரலாற்றை ஆண்டவர் தம் கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றால், நம் தனிப்பட்ட வாழ்க்கைக்கு அவர் என்ன செய்யமுடியும்?

# தேவதூதனால் தொடப்படுதல்

**கேள்வி: தானியேலை ஒவ்வொரு முறை தேவதூதன் தொட்டபோதெல்லாம் என்ன நடந்தது? தானியேல் 10:10-19.**

---

தெய்வீக ஒளியின் பிரகாசத்தில் மூழ்கி, தீர்க்கதரிசி கீழே விழுகிறான். அப்போது ஒரு தேவதூதன் அவனைத் தொட்டு, ஆறுதலளிக்கிறான். தேவதூதன் மூன்று முறை தானியேலைத் தொடுகிறான்.

பரலோகத்திலிருந்து வரும் ஆறுதலின் வார்த்தைகளை நின்று கேட்க **முதல் தொடுதல்** உதவுகிறது: 'தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச்சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்.' தானி10:12. தானியேலின் ஜெபம் பரலோகத்தை அசைத்துள்ளது. நம் ஜெபங்களை தேவன் கேட்கிறார் என்பதற்கான உறுதிப்பாடாக இது இருக்கிறது. கஷ்ட காலங்களில் இது ஆறுதல் தருகிறது.

**இரண்டாவது தொடுதல்** தானியேலை பேச வைக்கிறது. தீர்க்கதரிசி தனது வார்த்தைகளை கர்த்தருக்குமுன்பாக ஊற்றி, தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்: 'என் ஆண்டவனே, தரிசனத்தினால் என் மூட்டுகள் புரண்டன, பெலனற்றுப்போனேன். ஆகையால் என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? இனி என்னில் பெலனில்லை, என்னில் மூச்சுமில்லை.' தானி10:16, 17. எனவே, தேவன் நம்மிடம் பேசுவதுமட்டுமல்ல; நம் உணர்வுகள், தேவைகள், ஆசைகளை அவரிடம் சொல்லும்படி நாம் வாய் திறக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

**மூன்றாவது தொடுதல்** அவருக்கு வல்லமை தந்தது. தானியேல் தன்னுடைய இயலாமையை உணர்ந்தபோது, தேவதூதன் அவனைத் தொட்டு, தேவசமாதானத்தால் ஆறுதல்தருகிறான்: 'பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள், திடங்கொள்.' தானி10:19. தானியேலின் ஜெபங்களுக்குப் பதில்தருகிற விதத்தில்தான் தேவதூதன் அனுப்பப்பட்டான். அதாவது, எருசலேமின் நிலைமை குறித்து தானியேல் துக்கப்பட்டபோது, அவனை ஊக்குவிப்பதற்கே 11 ஆம் அதிகாரத்தின் தரிசனம் கொடுக்கப்பட்டது. தேவன் நம் பக்கம் இருப்பதால், நமக்குத் துன்பம் வந்தாலும், நாம் சமாதானமாக இருக்கலாம். எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்க்க அவருடைய அன்பான தொடுதல் உதவுகிறது.

---

'வாழ்க்கையின் சாதாரண வேலைகளை செய்கிற நமக்கு, பரலோகம் மிக அருகில் இருக்கலாம்.' – *DA* பக். 48. பரலோகமும் பூலோகமும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறீர்களா? இந்த உண்மையை உங்கள் மனதில் எப்போதும் வைத்திருந்தால் நீங்கள் எப்படி வித்தியாசமான வாழ்க்கை வாழலாம்?

# ஒரு பெரிய மோதல்

**கேள்வி: தானியேலுக்கு இங்கே தேவன் எதை வெளிப்படுத்தினார்? தானியேல் 10:20, 21.**

---

மனித வரலாற்றுக்குப் பின்னணியில் நடக்கிற பிரபஞ்சயுத்தத்தை தானியேலுக்கு வெளிப்படுத்தினார். தானியேல் ஜெபிக்க ஆரம்பித்தவுடன், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இடையே ஒரு ஆன்மிக யுத்தம் துவங்கியது. யூதர்கள் ஆலயம் கட்டுவதை பெர்சிய ராஜா தடுக்கக்கூடாதென்று பெர்சிய ராஜாவுடன் தூதர்கள் ஒரு போராட்டத்தைத் தொடங்கினர். பெர்சியாவின் ராஜா கோரேஸ் என்பதை தானியேல் 10 இல் பார்க்கிறோம். ஆனால், தேவ தூதர்களை எதிர்ப்பதற்கு ஒரு மனித ராஜாவிடம் தன்னில்தானே பெலன் எதுவும் இருக்காது. அந்த மனித ராஜாவுக்குப் பின்னணியில் ஓர் ஆன்மிக சக்தி இருந்திருக்க வேண்டும். யூதர்கள் ஆலயத்தைக் கட்டாதபடி தடுக்குமாறு கோரேஸை அதுதான் தூண்டியிருக்க வேண்டும்.

இதேபோன்ற நிலை எசேக்கியேல் 28 இல் இருந்தது. அதில் தீருவின் ராஜாவுக்குப் பின்னால் செயல்பட்ட ஆன்மிகச் சக்தியான சாத்தானைக் காண்கிறோம். எருசலேமில் மீண்டும் ஆலயம்கட்டப்படுவதை நிறுத்துவதற்கு சாத்தான் முயன்றதை இது காட்டுகிறது. தேவனுடைய திட்டத்தை உலகத்தார் எதிர்க்கும்போது, அவர்களுக்குப் பின்னாலிருந்து ஆவி உலகமும் செயல்படுகிறது என்பதை இது காட்டுகிறது.

**கேள்வி: என்ன வகையான யுத்தத்தை இங்கே பார்க்கிறோம்? தானியேல் 10:13.**

'மேதிய-பெர்சிய அதிகார வர்க்கத்தில் தேவமக்கள்மேல் வெறுப்பை உண்டாக்க சாத்தான் முயன்றபோது, யூதருக்காக தேவதூதர்கள் வேலைசெய்தார்கள். இந்த சர்ச்சையில் அனைத்துப் பரலோகமும் ஆர்வம் காட்டுகிறது. நல்ல சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கும் இடையே நடக்கிற இந்த வலிமையான போராட்டத்தின் ஒரு காட்சியை தானியேல் தீர்க்கதரிசிமூலம் தேவன் நமக்குக் காட்டுகிறார். மூன்று வாரங்களாக அந்தகாரச் சக்திகளுடன் காபிரியேல் யுத்தம்செய்தான். கோரேஸின் மனதில் தீய சக்திகள் செய்த தாக்கங்களை மாற்ற முயன்றார்; போட்டி முடிவதற்கு முன்பு, கிறிஸ்துவே காபிரியேலுக்கு உதவிசெய்ய வந்தார். 'பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட்டும் என்னோடே எதிர்த்து நின்றான்' என்று காபிரியேல் அறிவித்தான்; 'ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்; ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்.' தானியேல் 10:13. 'தேவனுடைய மக்களுக்காக பரலோகம் செய்யக்கூடிய அனைத்தையும் தேவன் செய்தார். இறுதியில் வெற்றி கிடைத்தது. கோரஸின் எல்லா நாட்களிலும், ஏழரை ஆண்டுகள் ஆட்சி செய்த அவரது மகன் கேம்பிசஸின் எல்லா நாட்களிலும் எதிரிகளின் படைகள் தடுக்கப்பட்டன.' *PK* பக். 571, 572.

# வெற்றிகரமான அதிபதி

தானியேல் புத்தகத்தில் மிக முக்கியமான நபர் 'மனிதகுமாரன்.' தானி 7:13. இவர்தாம் 'சேனையின் அதிபதி.' தானி 8:11. இவரே மிகாவேல். தானி 10:12. மிகாவேல் என்றால், 'தேவனைப் போன்றவர் யார்?' என்று பொருள். பெர்சிய அதிபதியுடன் நடந்த மோதலில் காபிரியேலுக்கு உதவ மிகாவேல் வந்தார். தானி 10:13. 'உங்கள் அதிபதியாகிய மிகாவேல்' என்று காபிரியேல் குறிப்பிடுகிறான். தானி 10:21. அதாவது, இவர் தேவமக்களின் அதிபதி. தேவனுடைய மக்களுக்காக மிகாவேல் நிற்கிறார். தானி 12:1. இந்த மிகாவேல்தான் சாத்தானுக்கு எதிராகப் போராடி மோசேயை உயிர்த்தெழுப்பினார். யூதா 9. சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் தோற்கடித்த பரலோக இராணுவத்தின் தலைவர் இவரே. வெளி 12:7. இந்த மிகாவேல் வேறு யாருமல்ல, இவர் இயேசு கிறிஸ்துவே. பெர்சியப் பேரரசின் ராஜாவுக்குப் பின்னால் ஆவிக்குரிய படை ஒன்று இருந்தது; தேவனுடைய மக்களுக்குப் பின்னால் அவர்களுடைய ராஜா மிகாவேல் இருக்கிறார். அவர்களுக்காக மிகாவேல் யுத்தம் செய்கிறார்; அவர்கள் வெற்றிபெறுகிறார்கள்.

**கேள்வி: பிரபஞ்சப் போராட்டத்தில் இயேசு எவ்வாறு வெற்றிபெற்றார்? கொலோ 2:15.**

---

தீய சக்திகளை சந்திக்கும்போது, உங்கள் தளபதியான இயேசுவை நம்புங்கள். அவர் தமது பூலோக ஊழியத்தின் ஆரம்பத்தில் சாத்தானைத் தோற்கடித்தார். பிசாசுகளின் பிடியிலிருந்து மக்களை விடுவித்தார். கல்வாரி நோக்கி இயேசு செல்வதை தடுக்க பேதுருமூலம் தீயவன் முயற்சித்தபோது, இயேசு அந்தத் தீயவனை விரட்டியடித்தார். சீடர்களுக்கு அவர் அளித்த இறுதி வார்த்தைகளில், இயேசு தமக்கு வரவிருந்த மரணத்தை ஒரு யுத்தம் என்றார்; அதிலும் அவரே வெற்றி அடைந்தார். 'இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்.' யோவான் 12:31, 32.

சில நேரங்களில் நம்மைச் சுற்றிலும் எல்லாம மிகவும் மோசமாகத் தெரிகிறது. வன்முறை, ஒழுக்கக்கேடு, ஊழல், நோய் போன்றவை எல்லா இடங்களிலும் வாதிக்கின்றன. மாம்சமும் இரத்தமும் இல்லாத ஒரு எதிரி எல்லாப் பக்கங்களிலிருந்து நம்மைக் கொடூரமாக தாக்குகிறான். நாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், இயேசு நமக்காகப் போராடுகிறார்; பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் நம் அதிபதியாகவும் பிரதான ஆசாரியராகவும் நிற்கிறார்.

வெற்றி பற்றிய வாக்குத்தத்தத்தை நம் சொந்த கிறிஸ்தவ வாழ்க்கையில் எவ்வாறு உண்மையான அனுபவமாக நாம் மாற்றமுடியும்? ரோமர் 8:37–39.

## மேலும் படிக்க:

'மூன்று வாரங்களாக அந்தகாரச் சக்திகளுடன் காபிரியேல் யுத்தம் செய்தார். கோரேஸின் மனதில் பிசாசு செய்த தாக்கங்களை மாற்ற முயன்றார். தேவனுடைய மக்களுக்காக பரலோகம் செய்யக்கூடிய அனைத்தையும் தேவன் செய்தார். வெற்றி கிடைத்தது; கோரேஸின் எல்லா நாட்களிலும், அவருடைய மகன் கேம்பிசஸின் எல்லா நாட்களிலும் எதிரிகளின் படைகள் தடுக்கப்பட்டன.' – *PK,* பக்.572.

'பரலோகத்தின் மகத்துவமானவர் தானியேலுக்கு எவ்வளவு பெரிய கனத்தைக் கொடுத்தார்! நடுங்கின தமது ஊழியருக்கு ஆறுதல் தந்தார். அவனுடைய ஜெபம் பரலோகத்தில் கேட்கப்பட்டதாக அவனுக்கு உறுதியளித்தார். அந்த தீவிர வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் விதமாக, பெர்சிய ராஜாவின் மனதை மாற்றுவதற்காக காபிரியேல் தூதனை அனுப்பினார். மூன்று வாரங்கள் தானியேல் உபவாசித்து ஜெபம்செய்துகொண்டிருந்தபோது, தேவனுடைய ஆவியின் தூண்டுதலை ராஜா எதிர்த்தார்; ஆனால் பரலோகத்தின் அதிபதியும் பிரதான தூதருமான மிகாவேல், அநதப் பிடிவாத ராஜாவின் மனதை மாற்ற வந்தார்.' – *SL,* பக். 51.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *கிறிஸ்தவ வரலாற்றில் இந்த உண்மையைப் பார்த்த முதல் நபர்கள் நாம் அல்ல என்றாலும், செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் 'மாபெரும் போராட்டம்' எனும் கருத்தின் வலுவான ஆதரவாளர்கள். கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் பிரபஞ்சம் முழுவதும் ஒரு போராட்டம் நடக்கிறது. ஒவ்வொரு மனிதனும் உண்மையில் இந்தப் போராட்டத்தில் மாட்டியிருக்கிறான். மதச்சார்பற்ற மக்கள்கூட, இந்த யுத்தத்தின் யதார்த்தத்தைப்பற்றி பேசியிருக்கிறார்கள். இதில் உங்கள் சொந்த அனுபவம் என்ன? உங்கள் சொந்த வாழ்க்கையில் இந்தப் போராட்டம் வெளிப்படுவதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? போராடுகிற மற்றவர்களுக்கு உதவ, நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?*

2 *பவுல் பயன்படுத்துகிற இராணுவ உதாரணங்களைக் கவனியுங்கள். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நமக்கு என்ன 'யுத்த ஆலோசனைகளை' இங்கே பார்க்கிறோம்? எபேசியர் 6:10-18.*

3 *தானியேல் 10:11 இலும், 9:23 இலும் தானியேலை 'பிரியமானவன்' என்று வேதாகமம் அழைக்கிறது. இது பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இடையிலே நெருங்கிய உணர்ச்சிபூர்வமான இணைப்பு இருப்பதைப்பற்றி என்ன சொல்கிறது? நவீன உலகின் நாத்திகப் பார்வையுடன் ஒப்பிடும்போது, இந்த உண்மை எவ்வளவு வேறுபட்டது என்பதைப்பற்றிச் சிந்தியுங்கள். தானியேலைப் பற்றிய இந்த குறிப்பில் காணப்படுவது போல, இந்த வேதாகமக் கருத்து நமக்கு என்ன நம்பிக்கை தருகிறது?*